International Journal of Science, Strategic Management and Technology
Volume **02** Issue **04** April-**2026** | ISSN: **3108-1762 (Online)** | Impact Factor: 3.8
An International, Peer-Reviewed, Open Access Scholarly Journal Indexed in recognized academic databases

# பரத்தையின் பரிணாமங்கள் சங்கம் முதல் சமகாலம் வரை

**முனைவர்.ஈஸ்வரன் க.**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த் துறை,
கேஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்பத்தூர்.
Email id – lakashek18@gmail.com
ORCID ID – 0009-0003-2112-8329

https://doi.org/10.55041/ijsmt.v2i4.353

**Cite this Article**: க., ▯. (2026). பரத்தையின் பரிணாமங்கள் சங்கம் முதல் சமகாலம் வரை. International Journal of Science, Strategic Management and Technology, *02*(04). https://doi.org/10.55041/ijsmt.v2i4.353

**License:** This article is published under the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), permitting use, distribution, and reproduction in any medium, provided the original author(s) and source are properly credited.

**ஆய்வுச்சுருக்கம்**

சமுக ஒடுக்குமுறையின் முக்கிய செயல்முறைகளுள் முதன்மையானது மனிதன் சக மனிதனை ஒடுக்கி, ஒதுக்கி வைத்து வாழும் முறையாகும். இவ்வரலாற்றுப் போக்கில் ஆணினம் பெண்ணினத்தை வெறுங் கருவிகளாகவும், விலைப் பொருட்களாகவும் பல்வேறு வகையில் ஒடுக்குமுறை செய்து அவற்றினை சமூகக் கட்டமைப்பாய் பலவந்தப்படுத்தி, ஆணாதிக்கம் பல்வேறு வகையான கருத்தினை விதைத்து நடைமுறைப்படுத்தி இருக்கிறது. இம்முறை பண்டைய காலந் தொட்டு இன்று வரையும் மறக்க முடியாத நிகழ்வாய் மாறி நிற்கிறது. நாகரீக காலந் தொட்டு இன்று வரையும் பெண் சமுதாயத்திற்கான கொடுமைகள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே வருவதையும் ஆணாதிக்கச் சமுதாயம் அன்று முதல் ஏன் இன்று வரையிலும் கூட வேடிக்கைப் பார்த்துக் கொண்டே வந்துள்ளதையும் வரலாற்றின் வழியிலும் இன்றைய நடைமுறையிலும் நாம் இலக்கியவெளியிலும் யதார்த்தவெளியிலும் காண முடிகிறது. தாய்வழி சமூகத்திற்குப் பின்னர் பெண்கள் பல்வேறு வகையில் சமூக ஒடுக்குமுறைக்குள் ஒருபுறம் சிக்கிக் கிடக்க, அதையும் தாண்டி, ஒடுக்குமுறைக்குள் உள்ளாக்கப்பட்ட பெண்ணினத்தை இன உற்பத்தி செய்யும் வெறுங்கருவிகளைப் போல பயன்படுத்தி அழிக்கவும் செய்ததை பல்வேறு சான்றுகளின் வழியாக மெய்ப்பிக்க முடியும். பழங்காலத்தில் பெண்கள் சமூக விதிகளாய் பல்வேறு ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததையும் அறிய முடிகிறது. குறிப்பாக, தந்தைவழி சமூகம் நிலவுடைமை சமூகமாய் நிலவியிருந்த காலத்தில், பெண்களுக்கென பல்வேறு விதிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய எந்த விதிமுறைக்கும் உட்படாத இலக்கிய இயங்கியல் வெளியில் பரத்தை என்றொரு இனம் இருந்தது என்பதை அறிய முடிகின்றது. இத்தகைய பரத்தையர்சார் வாழ்வியல் பண்டைய காலம் முதல் இன்று வரையில் தன்னை இலக்கியங்களில் எவ்வாறு நகர்த்திச் செல்கின்றது என்பதை இவ்வாய்வு கட்டுரை விலக்குகின்றது.

© Author(s). This work is peer-reviewed, openly published, and permanently archived
This article is openly accessible and reusable with proper attribution.
https://ijsmt.org/ , Email: editor@ijsmt.org

**திறவுச்சொல்**
இயங்கியல், இலக்கியவெளி,ஆணாதிக்கம், ஒடுக்குமுறை, பெண்ணியம், தாய்வழி சமூகம், பரத்தை, ஆரிய கட்டமைப்பு.

**முன்னுரை**

தாய் வழி சமூகம் உடைபடும் தருணத்தில் ஆண் மையவாதம் தொடக்கம் பெறுகிறது. அதன் தொடக்கம் சிறு சிறு கூறுகளாக உருமாற்றம் செய்யப்பட்டு, பின் ஆணியம் என்ற கோட்பாட்டு அடிப்படையில் விரிவடைகின்றது. தொடக்க கால படைப்புகளும், பனுவலாக்கமும் ஆண் எழுத்தின் மூலம் பெண் சார்ந்த உணர்வுகளைப் பதிவு செய்வதில் முதன்மைத் தன்மையைக் காட்டி நின்றது. இதன் விளைவு பெண் சார்ந்த கருத்தியல் பொருண்மைகள் கத்தரிக்கப்பட்ட செடிகளின் தன்மையாக தொக்கி நின்றது. பின்பு 70,80 களில் மேலைநாட்டுப் பெண்ணியம் என்ற கருத்தாக்கம் இந்திய எழுத்துலகில் ஊடுருவியதன் மூலம் பெண் சார்ந்த கருத்தியல் மாற்றம், பெண் சார்ந்த பார்வை என்பது படைப்பாக்கங்களில் மாற்றம் பெற தொடங்கியது. அம்மாற்றத்தின் அடிப்படையே பெண் எழுத்தாளர்களின் அறிமுகமாக கொள்ள வேண்டும். இம்மாற்றத்தின் அடிப்படையில் பல்வேறுபட்ட, பன்முகத் தன்மையுடைய பெண் சார்ந்த படைப்புகள் வெளிவரத் தொடங்கின. அவற்றின் உட்பொருண்மைகளாக பெண் சுதந்திரம், பெண் அடிமை முறை, பெண் எழுச்சி, சம உரிமை போன்ற கொள்கைகள் அடிப்படையாக அமையப்பட்டது. இத்தன்மைகள் அதிகம் ஏற்கப்பட்டு விரிவடைவதில் தமிழ் இலக்கியங்கள் பெரிதும் துணை நின்றன. அவ்வகையில் சங்கஇலக்கிய அகமரபில் காணப்படும் பெண்மாந்தர்களில் குடும்ப அமைப்பு சாராத பெண்ணாக அமைபவள் பரத்தை. இரண்டாயிரம் வருடப் பழமை வாய்ந்த சங்க இலக்கியத்திலிருந்து இற்றைநாள் வரையிலான கவிதைகளில் பரத்தை சார்ந்த வெளிப்பாடு எவ்வாறு உட்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தரவின் அடிப்படையில் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

நில உடைமைச் சமூகத்திற்காகவும் தனிச்சொத்துரிமைக்காக ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஆரிய கட்டமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டாலும் ஒருத்திக்கு ஒருவன் என்ற தற்கால கற்பியல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கற்பியல் சார்ந்த கொள்கை என்பது தனிப்பட்ட சமூகத்தின் வலை என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். சமூகம் என்ற பொதுபுத்தி தன் வாரிசுரிமையைப் பாதுகாக்க ஆண், பெண்ணுக்குக் கற்புக்கோட்பாட்டை வலியுறுத்தினான். அதை இலக்கியங்களிலும் உரக்க கூவினான். குடும்ப என்ற எதார்த்த நிறுவனத்தைக் கட்டமைத்த ஆண்மையச்சமூகம் தன் உடல் சார்ந்த பாலியல்வேட்கையை நிறைவு செய்ய உருவாக்கிக்கொண்டதே அல்லது உருவாக்கப்பட்டதே பரத்தமை எனலாம்.இருப்பினும் உடல் புனிதம் என்பதி பின்னாலில் பக்தி என்ற கோட்படு மாற்றியது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். சங்க இலக்கியம் காட்டும் இற்பரத்தை, காதற்பரத்தை, சேரிப்பரத்தை, கணிகையர், காம கணிகையர், காமகிழத்தியர் மற்றும் உரிமை மகளீர் போன்ற ஒரு சமூகம் இவற்றின் அடிப்படையில் உருவாக்கம் பெற்றது. பெண் ஒடுக்குமுறையின் ஒருபகுதி என்று இதைக் குறிப்பிடும் அதேவேளையில் இத்தன்மையில் தனக்கான ஒரு பரந்த வெளியைப் பரத்தை உருவாக்கிக் கொள்கிறாள் என்பதற்கும் புலவர்களின் புலம்பல் இலக்கியங்களே சான்று பகர்கின்றன.

© Author(s). This work is peer-reviewed, openly published, and permanently archived
This article is openly accessible and reusable with proper attribution.

இதனடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களில் மருத நிலமே நிலஉடைமைச் சமூகத்தையும் அது சார்ந்த ஆண்மையச் சமூகத்தையும் அவர்களுக்காக் பரத்தையர்களையும் உருவாக்கிய மிக முக்கிய களமாக அமைகிறது. குறிஞ்சி, முல்லைத் திணைகளில் மலையிலும் காட்டிலும் திரிந்த மானுட சமூகத்திற்குள் ஆண், பெண் போன்ற பால் பேதம் பெரிதாய் இருந்திருக்கவோ அது சார்ந்த ஏற்றத்தாழ்வுக்கோ வழியில்லை. மருத நிலம் என்பது பொருளாதாரத்தின் மையம் என்றும் ஆண் சார்ந்த சட்டங்கள் நிரம்பிய நிலமாகவும் இருந்த்து. இதன் விளைவாகவே மருத நிலம் சார்ந்த பாடல்களிலேயே பரத்தையர் சார்ந்த பாடல்களையும் மிகுதியாகப் பார்க்க முடிகிறது. காரணம் பொருளாதார சமூகம் என்பதும் தன்தேவை என்பதும் வலுப்பெற்று நின்றதேயாகும்.

சங்க இலக்கியம் காட்டும் இவ்வரையரை மேட்டிமைப் பெண்களுக்கானதேயொழிய சமூகத்தின் அடித்தட்டில் உள்ள பெண்களின் நிலை பெரும்பான்மையும் பதியப்படவில்லை என்ற வர்க்க பேதத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இருப்பினும் மறைமுக மானுட வேற்றுமையை சங்க இலக்கியங்கள் தூக்கி நிற்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். மேட்டிமைப் பெண்ணான தலைவிக்குரிய பண்புகளாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று வரையறுக்கும் தொல்காப்பியர்,

**‘சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்’ (தொல். பொ. கள. 20)**

என்றும்

**‘தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல்**
**எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை’ (தொல். பொ. கள. 28)**

என்றும் சொல்லி ஆணாதிக்க விழுமியங்களால் பெண்ணுக்கான மொழியைத் தடை செய்கிறார். மொழி காலங்காலமாக ஆணாதிக்கவயப்பட்டதாக உள்ளதையும் பெண்மொழி இன்றும் சாத்தியப்படாத நிலையையும் கண்கூடாகப் பார்க்கிறோம். எந்தவகையான அதிகாரமும் முதலில் எதிராளியின் சிந்தனையை, செயலை அழிக்கத் தொடங்கும். அவ்வகையில் பெண்சமூக ஒடுக்குமுறை முளைவிடும்போதே அச்சமூகத்தின் பேச்சு, குரல், மொழி ஆகியவற்றை அழிப்பதற்கான செயல்பாடுகள் நடந்தேறியுள்ளன என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அகஇலக்கிய மரபில் பேசப்படும் பெண்களான நற்றாய், செவிலி, தோழி, தலைவி ஆகியோருள் ஓரளவாவது பேசுபவள் தோழி மட்டுமே. அவளும் பல்விதமான கட்டுப்பாடுகளுக்கிடையிலேயே பேசுகிறாள். இவர்களிடமெல்லாம் இருந்து வேறுபட்டு ஒலிக்கும் ஒற்றைக் குரலாய்ப் பரத்தையின் குரல் ஒலிக்கிறது. தன் சமூக நடைமுறையை எதார்த்த வாழ்வியலுக்கு அப்பால் நின்று உணர்த்தியவள் பரத்தை. நாணம் பெண்ணுக்கு வரையறுக்கப்பட்ட விதிகளுள் முதன்மையானது. எனவேதான் உயிரைவிட நாணத்தை வலியுறுத்திய பாடல்கள் இயற்றப்பட்டன. ஆனால் பரத்தை இதனைத் துச்சமாக மதித்துப் பேசுகிறாள்.

**‘சாஅய் ஒதுங்குந் துறைகேழ் ஊரனொடு**
**ஆவதாக இனிநாண் உண்டோ’ (அகம் 276)**

நாணத்தை உயிர்நிலையாய் நினைக்கும் தலைவிக்கு எதிர்நிலையில் வைக்கப்படும் பரத்தையின் வாழ்வில் நாணம் அர்த்தமற்றதாய் மாற்றம் பெறுகிறது. இப்பொதுவெளியில்

© Author(s). This work is peer-reviewed, openly published, and permanently archived
This article is openly accessible and reusable with proper attribution.

International Journal of Science, Strategic Management and Technology
Volume 02 Issue 04 April-2026 | ISSN: 3108-1762 (Online) | Impact Factor: 3.8
An International, Peer-Reviewed, Open Access Scholarly Journal Indexed in recognized academic databases

பரத்தை என்பவள் வாயிலாக பெண்ணிய சிந்தனை துளிர்விடுகின்றது. மேலை நாட்டுக் கோட்பாடான பெண்ணியம் வருவதற்கு முன்பே சங்க இலக்கிய வெளியில் பரத்தை மூலம் இக்கோட்பாடு இருந்த்து என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். பெண்ணுடல் எப்போதும் தணிக்கை செய்யப்படுவது; கண்காணிக்கப்படுவது. அது எண்ணற்ற ஆணாதிக்க விழுமியங்களால் கட்டுண்டுள்ளது. குடும்பப் பெண் தன் கணவனுக்காகவே தன்னை ஒப்பனை செய்து கொள்ளக் கடமைப்பட்டவள். கணவனைப் பிரிந்து இருக்கும்போதோ, இல்லாதபோதோ அல்லது மிகையாகவோ தன்னை ஒப்பனை செய்து கொள்ளும் பெண்ணை வேசி என்றும் நாடகக்காரி என்றும் ஏசும் பழக்கம் இன்றளவிலும் உள்ளது. இது சமூகம் கட்டமைக்கப்பட்ட அதிகார மேலாண்மையாகும். ஆனால் தன்னை அழகுபடுத்திக் கொண்டு நறுமணம் கமழத் தெருவில் உலாவும் பரத்தையை மதுரைக் காஞ்சி காட்டுகிறது.

**‘நீர் திரண்டன்ன கோதை பிறக்கிட்டு**
**ஆய்கோல் அவிர்தொடி விளங்க வீசிப்**
**போதவிழ் புதுமலர் தெருவுடன் கமழ’ (ம.காஞ்சி 562 - 564)**

தனக்கு விதிக்கப்பட்டதே இதுவும் என்பதை உணராத பரத்தை, சுதந்திரமென்று கருதிக் கொண்டு, மலர்களால் தன்னை அலங்கரித்தவளாய் வளையல்கள் ஒலிக்கக் கைகளை வீசியபடி தெருவில் நடப்பதை இப்பாடல் வரிகள் வெளிக்காட்டுகின்றன. எவையெல்லாம் குடும்பப்பெண்ணுக்கு மறுக்கப்பட்டதோ அவையெல்லாம் பரத்தைக்கான விதிகளாக்கப்பட்டன. அலங்கரித்தல், உரக்கப் பேசுதல், சிரித்தல், ஆடுதல், பாடுதலுக்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. பிறரைக் கவர்தலே பரத்தையருக்கான கோட்ப்பாடாக்கப்பட்டது. ஆண்மையச் சமூகத்தால் உருவாக்கப்பட்ட பரத்தையரைச் சுதந்திரம் பெற்றவர், ஆணாதிக்கத்திலிருந்து விடுபட்டவர் என்று பார்ப்பது ஏற்புடையதல்ல. ஆனாலும் தனக்கான குறுகிய வெளியின் இடையில் பரத்தை தன் உணர்வுகளை வெளிக்காட்டுகிறாள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இக்குறுகிய வெளி ஆணாதிக்கத்தை தன்வயப்படுத்திருப்பதையும் அறிவார்ந்த சமூகம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஒரு பரத்தை தன்னை ஏமாற்றிய தலைவனிடம்,

**‘தெறலருங் கடவுள் முன்னர்த் தேற்றி**
**மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்து**
**ஆர்வ நெஞ்சந் தலைத்தலை சிறப்பநின்**
**மார்புதரு கல்லாய்ப் பிறனாயினையே**
**இனியான் விடுக்குவென் அல்லேன்’ (அகம் 396)**

என்று சூளுரைக்கிறாள். பரத்தையும் தலைவனுக்கு ஒவ்வொரு வகையில் கட்டுப்பட்டவளாயினும் தலைவனை விமர்சிக்கிறாள்; இனியான் விடுக்குவென் அல்லேன் என்று சினத்தைக் காட்டிச் சபதம் செய்கிறாள். இது தலைவிக்கு முற்று முழுதாக மறுக்கப்பட்ட ஒன்று. ஆனால் குடும்ப நிறுவனத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்ட பரத்தை தலைவனை நோக்கிக் குரலுயர்த்திப் பேசுகிறாள். தலைவனைக் கேள்வி கேட்பவளாக இருக்கின்றாள். மட்டுமல்லாமல் தலைவியிடம் வாதிடும்போது, தலைவனே உடனுறை பகை என்று உண்மையுரைப்பவளாகவும் இருக்கின்றாள்.

© Author(s). This work is peer-reviewed, openly published, and permanently archived
This article is openly accessible and reusable with proper attribution.

International Journal of Science, Strategic Management and Technology
Volume **02** Issue **04** April-**2026** | ISSN: **3108-1762 (Online)** | Impact Factor: 3.8
An International, Peer-Reviewed, Open Access Scholarly Journal Indexed in recognized academic databases

**‘யாந்தம் பகையேம் அல்லேம் சேர்ந்தோர்**
**திருநுதல் பசப்ப நீங்கும்**
**கொழுநனுஞ் சாலுந்தன் உடனுறை பகையே’ (அகம் 186)**
தலைவன் மீதான சினத்தையும் பரத்தை மீது ஏற்றி, அவளிடம் தன் பகையைக் காட்டும் தலைவியிடம், நான் உன்னுடைய பகை அல்ல. உனக்கும் எனக்கும் இடையில் நின்று நம் இருவரையும் ஒடுக்கும் தலைவனே பகை என்று பேசுகிறாள். இந்த இடத்தில் பரத்தையின் பேச்சு அதிகாரத்திற்கெதிரான கலகச் செயற்பாடாக மாற்றம் பெறுகிறது. அறிவுநுட்பத்துடன் சிந்தித்து ஆணின் வல்லாதிக்கத்தைக் கேள்வி கேட்பவளாக, எள்ளல் செய்பவளாக, உரிமைக்குரல் கொடுப்பவளாக சங்க இலக்கியத்தில் பரத்தையே இருக்கிறாள் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

சங்க இலக்கியத்திற்குப் பின் காப்பிய காலத்திலும் கூட மாதவி, மணிமேகலை, பரவையார் எனச் சில கதை மாந்தரைத் தாண்டினாலும் நீதியிலக்கியக் காலம் தொட்டுப் பரத்தையர் என்ற பிரிவினர் மிகவும் இழிவுபடுத்திப் பார்க்கப்பட்டனர். உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் வள்ளுவத்தில் **மாய மகளிர் (918), பொருட் பெண்டிர் (913), அன்பின் விழையார் (911), இருமணப் பெண்டிர் (920), வரைவின் மகளிர் (919)** என்றெல்லாம் வசை பாடப்பட்டனர். ஆணின் பாலியல் பசிக்கு இரையாகும் பரத்தை, ஆணாதிக்கச் சமூகத்தால் சுரண்டப்பட்டு, ஒதுக்கப்பட்டே வாழ்வு நடத்துகின்றாள். விளிம்புநிலையில் வாழும் பரத்தையைச் சுரண்டும் ஆண் சமூகமே மீண்டும் அவள் மீது குற்றச்சாட்டுகளையும் சுமத்துகிறது. அன்பில்லாதவர்களென்றும் இரு மனம் கொண்டவர்களென்றும் ஆண்மையச் சிந்தனையுடன் இக்கருத்தைப் பேசும் வள்ளுவர் நடுநிலை தவறிப் பேசுகிறார்.வள்ளுவரும் சமயச்சூழலில் பாகுபாடு காட்டியிருப்பது கவனிக்கத்தக்கது. ஒரு சார் கருத்துக்களை எப்படி உலகப் பொதுமறை என்று கூறமுடியும்.

முருகனின் பெருமை பேசும் திருப்புகழில் முருகனுக்கு அடுத்தபடியாகப் பேசப்படுவோர் பரத்தையர் எனில் அது மிகையான கூற்று அன்று. அந்நூலை எழுதிய அருணகிரிநாதர் தாசிகளால் செல்வமிழந்து, நோயுற்ற நிலையில் தாசிகளாலேயே புறக்கணிக்கப்படுபவராக அவருடைய வரலாறு பேசப்படுகிறது. அவருடைய பாடல்கள் சந்தத்துக்குப் பெயர் பெற்றவை. ஆனால் பெரும்பான்மைப் பாடல்கள் தாசிகளைப் பழிப்பதும் வசை பாடுவதும் நிரம்பியதாகவே உள்ளது.

**‘உருக்கம் பேசிய நீலியர் காசுகள்**
**பறிக்கும் தோஷிகள் மோக விகாரிகள்**
**உருட்டும் பார்வையர் மா பழிகாரிகள்’ ( திருப்புகழ் 27)**
பரத்தையர் வாழ்நிலை உணர்ந்தே பரத்தையரிடம் சென்று பொருளிழந்த அருணகிரிநாதர் தன் வரம்பு மீறித் தன்னை எதிர்கொண்டு நிற்கும் கணிகையரைப் புரியாமல் வெறுப்பை உமிழ்கிறார். அருணகிரிநாதர் மட்டுமின்றி சித்தர் பாடல்களிலும் இத்தகைய போக்கை நாம் காண முடியும். சித்தர் பாடல்களில் பரத்தையர் மட்டுமன்றிப் பொதுவாகவே பெண்களை இகழும் தன்மையைக் காணலாம். தம் துன்பத்துக்கே மாயப் பிசாசாக வந்த பெண்களே காரணம் என்று இவர்கள் கற்பிக்கும் தன்மை, தன் தவறு மறுத்து, தன் தவறையும் சேர்த்துப் பிறர் மேல் ஏற்றிக் கூறும் போக்கையே காட்டுகிறது. பெண்ணுடல் நுகர்விற்கானது; பாலியல் துய்ப்பிற்கானது என்று நம்பும் ஆண்மையச் சமூகத்தில் இயங்கும் இத்தகு பெரியோர்களும் கூடத் தன் புலனுணர்வை கட்டுப்படுத்த

© Author(s). This work is peer-reviewed, openly published, and permanently archived
This article is openly accessible and reusable with proper attribution.

இயலாதவர்களாய்த் தன் புலம்பலைப் பெண்களின் மீதான வெறுப்பாய் மாற்றிக் கவி புனைகின்றனர். சுவர் வந்து தன்னை இடித்துவிட்டது என்று சொல்லும் சிறு குழந்தை போலத் தன் மனத்தை அடக்க முடியாதவர்களாய் அலைபாய்ந்து, அல்லாடி விட்டு, தாசிகளின் மீது பாய்ந்து வசை பாடுவதே இவர்களின் ஆணாதிக்க அறம் என்பது இலக்கியவெளியில் கற்பிக்கப் படிகிறது. அப்படித்தான் கற்புக் கோட்பாடு உயர்த்தப்பட்டு, பரத்தையர் இழிவானவர்களாகக் காட்டப்பட்டனர். பெண்ணைப் புனிதமென்று பேசும் இந்தச் சமூகம்தான் பெண்களை பண்டமாக்கிச் சந்தையில் தோல் வியாபாரமும் செய்து வருகிறது. ஒவ்வொரு காலத்திலும் இதன் வடிவங்கள் மாறினாலும் பெண் பண்டப் பொருள், போகப் பொருள் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. நவீனப் புதுக்கவிதைகளில் பரத்தையர் பற்றிப் பேசும் மிக முக்கியமான நூலாக சரவண் கார்த்திகேயன் எழுதிய பரத்தையர் கூற்று தொகுப்பைச் சொல்லலாம்.

**‘சுதந்திரமென்பது**
**புணர்தலல்ல**
**புணர மறுத்தல்**
**என்றும்**
**கதவு ஜன்னலடைத்து**
**ஒளிர் விளக்கணைத்து**
**விழிசொக்கிப் புணரும்**
**பத்தினித் தாலி கட்டிய**
**வீட்டுப் பிராணியல்ல**
**நான் காட்டுராணி’**

என்று பெருமிதம் பேசும் சரவண கார்த்திகேயனின் கவிதைகளிலே இவர்களுடைய துயரமும் பதியப் பெற்றிருப்பதே இத்தொகுப்பை முக்கியமானதாக்குகிறது. இன்றைய சமூகத்தில் அடிமை வழக்கங்கள் ஒழிந்து விட்டதாகச் சொல்கிறோம். ஆனால் அது உண்மையல்ல. அவை இன்றும் இருக்கின்றன. ஆனால் பெண்கள் மட்டுமே அதற்கு ஆட்படுத்தப்படுகிறார்கள். அதன் பெயர்தான் விபச்சாரம் என்று விக்டர் ஹியூகோ பரத்தைமையின் பெயராலும் பெண் அடிமைப்படுத்தப்படுவதைப் பேசுகிறார். தொடர்ந்த காலங்களில் மையத்தை மட்டுமே புனிதப்படுத்தி, விளிம்புகளின் துயரத்தைப் பேசாது தவிர்த்த ஒரு பார்வையில் இருந்து விலகி நிற்கும் இக்கவிஞர், பெருமிதத்தைச் சொல்லும் நிலையிலேயே துயரத்தையும் பதிவு செய்கிறார்.

**‘உறக்கத்தின் அருமை கேள்**
**கறைபடாத இரவொன்றில்**
**கம்பளி போர்த்தித் துயிலும்**
**நிம்மதியின் சுகஸ்பரிசத்தைப்**
**பெருங்கனவாய்த் தரிசிக்கும்**
**ஓர் தேவடியாளிடம்**
**என்று உறக்கமற்ற இரவுகளைப் பேசும் கவிஞர்,**
**விரல் தொடுகிறாய்**
**இதழ் தொடுகிறாய்**
**இடை தொடுகிறாய்**
**முலை தொடுகிறாய்**

© Author(s). This work is peer-reviewed, openly published, and permanently archived
This article is openly accessible and reusable with proper attribution.

**பிருஷ்டம் தொடுகிறாய்**
**யோனி தொடுகிறாய்**
**எவனும் மனம் தொட்டதில்லை'**

என்று அவளுடைய குற்றச்சாட்டை, மனம் தொடாத உறவுகளில் பசியாறும் அவளது துயரத்தைச் சொற்களில் மொழிபெயர்க்கிறார். வருணிப்பதாயினும் இகழ்வதாயினும் பெருமிதம் பேசுவதாயினும் ஆண் குரலாகத்தானே இருக்கிறது, ஒற்றை குரலேனும் பெண் குரல் கிடைக்காதா என்று தேடுகையில் கிடைத்தாள் பரத்தையருள் ராணி. லீனா மணிமேகலை எழுதிய ஒரு கவிதைத் தொகுப்பு அது.

என் படுக்கையறைக்கு வந்தான் அவன்/அம்மணம்/அவனுக்குக் காட்சி/எனக்குச் செயல்/எனக்குக் காட்சி/அவனுக்குச் செயல்/தவளை வாசனை/நனைந்த பறவைக் குஞ்சொன்றின் தலை/கசியும் ரகசியங்களின்வெளுப்பு/பொந்து/நனவிலி/நரகத்தின் வாசல்/வெளியேறினான்/ஆனால் மீண்டும் வந்தான்/பருத்த மின்னலொன்று/ தாக்குண்டவனாய்/அதன் ஒளிக்குக் கட்டுண்டவனாய்/கன்னிமை என்பது கட்டுக்கதை என்றேன்/நீ நம்ப விருப்பப் படாதது என்றேன்/என் உடல் நினைவகம் அல்ல/மொழியுமல்ல/பேசுவேன்/புரிந்து கொள்ள மாட்டேன்/அர்த்தம் அதிகாரம் என்றேன்/பார்க்க முடியாததை நோக்கித் திரட்டப்பட்ட/மழுங்கிய முனையின் விறைப்பு/அவன் பார்வையை மங்கலாக்கியது என்று எழுதிச் செல்லும் இக்கவிதையின் இறுதியில்,

**'அவன் வாய் முணுமுணுத்தன பரத்தை**
**கவனிக்காமல் இல்லை**
**அசை போடும்போது திருத்திக் கொள்வான்**
**நான் பரத்தையருள் ராணி'**

என்று பரத்தையர் பற்றிப் பேசுவதாய்ப் புனைந்து முடிக்கிறார் லீனா. ஆனால் கவிதையில் எங்கும் பரத்தையருக்கான வெளி பேசப்படாததுடன் லீனாவின் குரலே பதிவாகியிருப்பதைக் கவிதை வாசிப்போர் உணர முடியும். இங்கே சொல்லப்படும் பரத்தை என்ற வசைச் சொல் கூட, மேலே கவிஞரின் குரலாகப் பதியப்பட்ட செய்திகளால் அழுத்தமின்றி, எந்த விதமான உணர்வையும் கிளர்த்தாமலே நம்மைக் கடந்து செல்கிறது. லீனாவின் இந்தப் பதிவு கடந்து பிற பெண் கவிஞர்கள் எவரும் பரத்தையர் பற்றிக் கவிதைகளை எழுதியதாக நானறிந்த வரையில் இல்லை. தொடர்ந்த இத்தனை நூற்றாண்டுப் பதிவுகளில் பரத்தையென்பவள் சுதந்திரமானவள், துடிப்புடன் பேசுபவள் போன்ற விடுதலைச் சிந்தனையுடனான குரல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் பதியப்பட்டிருப்பினும் அதை முழுமையாக ஒதுக்க முடியாதெனினும் ஏற்றுக் கொள்ள இயலாத நிலையிலேயே கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

பெண்களின் மீது மட்டுமே திணிக்கப்பட்ட ஒழுக்கம் பெரும் வன்முறைத்தன்மை கொண்டதாகவும் ஒடுக்குமுறையின் அடையாளம் பெற்றதுமாகவே இருப்பதை வரலாற்றின் பக்கங்களில் பரந்திருப்பதைக் காண முடியும். இந்த ஒழுக்க வரையறைக்குள் வராத பரத்தைக்கும் கூடச் சில விதிகளை அமைத்து, சமூகத்தில் இத்தகைய கட்டுமானத்தை உருவாக்கிய ஆண்மையமே அவர்களை இழிவானவர்களாகவும் கட்டமைத்து, அப்பெயர்களையே சமூகத்தின் வசைச்சொல்லாகவும் மாற்றிக் கேலி பேசியது. தன்னை அடக்க இயலாமையின் ஆற்றாமைகளை இந்தப் பெண்களின் மீது ஏற்றி ஏசியதும் பேசியதும் ஒரு பக்கப் பார்வையாய் விமர்சிப்பதுமே தமிழ் இலக்கியப்

© Author(s). This work is peer-reviewed, openly published, and permanently archived
This article is openly accessible and reusable with proper attribution.

பக்கங்களில் மிகுதியாக இருக்கிறது. இன்றைய நவீன யுகத்தில் விளிம்பு நிலை மக்களின் குரல் ஒலிக்கத் தொடங்கியிருக்கும் இற்றைக் காலத்திலும் மிகச் சிறிய குரலாகவே இவர்களைப் பற்றிய பதிவுகள் இருப்பது பரத்தையர் சார்ந்த சமூகக் கண்ணோட்டம் இன்றும் மாறாமல் இருப்பதன் அடிப்படையிலேயே என்று கொள்ளலாம்.

இருப்பினும் மானுடப் பரிணாமம் தொடங்கிய காலம் முதல் அதாவது நிலவுடைமைச் சமூகம் தோன்றிய காலம் முதல் ஒரு இலக்கியத்தின் பாடுபொருளானது இயல்பு, புனைவு எனும் இரு கூறுகளையோ அல்லது இரண்டனுள் ஒன்றையோ உள்ளடக்கியதாக அமையும். அதேபோல் கற்பனை, வருணனை, மீவியல் உள்ளிட்ட புனைவுக்கூறுகள் ஓர் இலக்கியத்தை அழகுபடுத்துவதாகத் திகழ்வன. சமூக இயங்குநிலையோடு ஒன்றிய தன்மையில் புனைவுகள் அமையும்போது அப்புனைவுகள் இடம்பெறும் இலக்கியத்தின் மேன்மைத்தன்மை காலம்கடந்தும் விதந்து பேசப்படுவதாக அமையும். அவ்வகையில் பரிணாம வெளியில் பரத்தை, பரத்தமை என்ற மிகப் பெரும் கோட்பாடு தனக்கான வெளியில் தனித்த தன்மையுடனும், எந்த இலக்கண, இலக்கிய கட்டுக்குள் தன்னை தகவமைத்துக் கொள்ளவில்லை. மேலை நாட்டுப் பெண்ணிய சிந்தனை என்பது 70, 80 களில் தான் தமிழ் இலக்கியச் சிந்தனைக்குள் ஊடுருவியது. ஆனால் சங்க இலக்கிய காலம் தொடக்கம் முதலே பரத்தையர் சமூகத்தின் மூலம் நமது இலக்கிய பரப்பில் பெண்ணியக் கோட்பாடு நிலைத்திருந்தது என்று தெளிவாக்க கூறமுடியும். இன்றளவும் பரத்தையர் வெளி என்பது இலக்கியங்களிலும் நடைமுறை வாழ்வியலிலும் தனித்தே நிற்கின்றன.

**பார்வை நூல்கள்**


- இலக்கியத்தில் தேவதாசிகள் - சி.எஸ். முருகேசன்
- கல்வெட்டுகளில் தேவதாசிகள் - எஸ்.சாந்தினிபீ
- சங்க இலக்கியத்தொகுதி - கழக வெளியீடு
- சங்க இலக்கியத்தொகுதி – NCBH
- தாழப்பறக்காத பரத்தையர் கோடி - பிரபஞ்சன்
- தேவதாசி முறை காலமும் கருத்தும் - கல்யாணி பிரபாகரன்
- தேவரடியார் - அ.வெண்ணிலா
- தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை
- தொல்காப்பியம் - தமிழ்ப் பல்கலைக்கழகம்
- பத்தினிப் பெண்டீர் அல்லோலம் - கமலாலயன்
- பரத்தையர் கூற்று தொகுப்பு - சரவண் கார்த்திகேயன்
- பரத்தையருள் ராணி - லீனா மணிமேகலை
- வரலாற்றில் தேவதாசிகள் - சி.எஸ். முருகேசன்


© Author(s). This work is peer-reviewed, openly published, and permanently archived
This article is openly accessible and reusable with proper attribution.